## ஒவ்வொரு துறையிலும் முன்னணி மாநிலமாக – வளர்ச்சிபெற்ற மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

# ‘திராவிட மாடல்’ அரசின் தொலைநோக்குத் திட்டங்களின் செயலாக்கம் குறித்து விளக்கம்!

### மக்கள் போற்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ஆட்சி!

### அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – எஸ்.எஸ்.சிவசங்கர் – முனைவர் கோவி.செழியன் சிறப்புப் பேட்டி!



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (02.09.2025) நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர், எஸ்.எஸ். சிவசங்கர், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர், தொலைநோக்கு திட்டங்களின் செயலாக்கம் குறித்து பத்திரிகையாளர்களை சந்தித்தார்கள்.

சென்னை, செப்.4–

**நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர். உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் ஆகியோர் சென்னை, தலைமைச் செயலகம், இரண்டாவது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (02.09.2025) தொலைநோக்குத் திட்டங்கள் செயலாக்கம் குறித்து பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கூறியதாவது :–**

முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலான இந்த திராவிட மாடல் அரசு, கடந்த 7.5.2021–ஆம் ஆண்டு ஒரு பொறுப்பேற்றுக் கொண்டபோது தமிழ்நாடு கொரோனா பெருந்தொற்றில் இருந்தது. அன்றைய சூழ்நிலையில் ஏறத்தாழ 17 இலட்சம் மக்கள் அதனால் பாதிக்கப்பட்டிருந்தார்கள். கொரோனா தொற்றின் முதல் அலை வரக்கூடிய காலகட்டத்தில் ஏறத்தாழ 8.59 இலட்சம் பேர் அதனால் பாதிக்கப்பட்டதாக புள்ளிவிவரங்கள் இருந்தது. ஆனால், ஆட்சி பொறுப்பை ஏற்ற அந்த காலத்தில் அது இரண்டு மடங்காக ஏறத்தாழ 17 இலட்சம் பேர் பாதிக்கக்கூடிய ஒரு கடுமையான சூழ்நிலை இருந்தது. அன்றைய தினம் சுவாசிப்பதற்கு கூட ஆக்சிஜன் உயிர் வழியில்லாத நிலை ஏற்பட்டு மிகப் பெரிய கடுமையான சூழல் இருந்தது.

சாதாரணமாக ஒரு நாளைக்கு 150 K ஆக்சிஜன் தேவை என்று சொன்னால் அன்றைய தினம் 650 K ஆக்சிஜன் தேவை என்கின்ற அளவிற்கு ஆக்சிஜன் தேவை உயர்ந்து இருந்தது. எனவே அந்த சூழ்நிலையில் கூட ஒரு வார் ரூம் அமைத்து எல்லோருக்கும் பிராணவாயுவை ஆக்சிஜன் அளிக்கக்கூடிய அந்த பணியை செய்து கொரோனா பெருந்தொற்றை சமாளித்து போர்க்கால அடிப்படையில் திராவிட மாடல் அரசு அதை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் கொரோனா பெருந்தொற்றின் நெருக்கடியில் இருந்தபோது, இன்னொரு பக்கம் தமிழ்நாட்டில் நிதி நெருக்கடியும் கடுமையான அளவில் இருந்தது. நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தமட்டில் 4.91 சதவீதமாகவும், வருவாய் பற்றாக்குறை என்பது 3.49 விழுக்காடாகவும் அன்றைக்கு இருந்தது. மாநிலத்தில் உள்நாட்டு வருவாய் வளர்ச்சி 0.07 என்கின்ற அந்த விழுக்காட்டில் இந்த அரசு பொறுப்பேற்றபோது அமைந்திருந்தது.

இந்த மூன்றரை ஆண்டு காலத்தில் 2023–ல் சென்னையை உலுக்கிப்போட்டிருக்கக்கூடிய மிக்ஜாம் புயல் – தென் மாவட்டங்களில் குறிப்பாக தூத்துக்குடியை மையமாக வைத்து வெள்ளப் பெருக்கு – தொடர்ந்து 2024–ல் விழுப்புரம், கடலூர் போன்ற மாவட்டங்களில் உருவான இயற்கைப் பேரிடர்கள் – இவற்றையெல்லாம் இந்த அரசு மிகச் சிறப்பான முறையில் எதிர்கொண்டது. அதேசமயத்தில் ஒன்றிய அரசின் நிதிப் பங்களிப்பு இல்லாமல் கூட இவற்றிலிருந்து தமிழ்நாட்டை மீட்டெடுத்தது கழக அரசு என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

பொதுவாக, தொடக்கத்தில் குறிப்பிட்டது போல, பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் எடுத்துக் கொண்டால், உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி (GSDP – Gross State Domestic Product) 0.07 சதவீதமாக இருந்தது. 2024–25–ஆம் ஆண்டில் இரட்டை இலக்க வளர்ச்சியை முதன்முறையாக நாம் பெற்று 11.19 சதவீதமாக நாம் வளர்ந்திருக்கிறோம். துவக்கத்தில் 0.07 சதவீதம் என்கின்ற விதத்தில் இருந்தது. இப்போது 11.19 என்ற இலக்கத்தை நாம் தொட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த வளர்ச்சி என்பது கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு பெற்றிருக்கக்கூடிய உச்சபட்சமான வளர்ச்சி என்பதையும் நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அதுபோல, நிதிப் பற்றாக்குறை, வருவாய் பற்றாக்குறையை எடுத்துக் கொண்டோம் என்று சொன்னால், 2020–21–ல் ஆட்சிப் பொறுப்பிற்கு வருகின்றபோது 3.49 சதவீதமாக இருந்த வருவாய் பற்றாக்குறை (Revenue deficit) இப்போது 1.17 என்கின்ற சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, நிதிப் பற்றாக்குறை (Fiscal deficit) ஆட்சி பொறுப்பேற்ற 2020–21–ல் 4.91 சதவீதமாக இருந்த அந்த நிதிப் பற்றாக்குறை இப்போது 3.00 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இது பல்வேறு இயற்கை இடர்பாடுகள், ஒன்றிய அரசிலிருந்து தேவையான போதிய நிதி வராத சூழ்நிலை, இவற்றுக்கிடையில் தமிழ்நாடு அரசு கொண்டிருக்கக்கூடிய மிகச் சிறப்பான நிதி மேலாண்மையின் காரணமாக முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், அவருடைய வழிகாட்டுதலின் பேரில் பல்வேறு துறைகள் மேற்கொண்டிருக்கக்கூடிய பணிகள் முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கக்கூடிய தொழில் முதலீடுகள், இவற்றின் வாயிலாக இந்த பொருளாதார வளர்ச்சியும், அதைப்போல நான் குறிப்பிட்டு இருக்கக்கூடிய குறியீடுகளில் பாராட்டத்தக்க முன்னேற்றங்களை நாம் பெற்றிருக்கிறோம்.

### பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிட்ட முன்னேற்றம்!

ஒவ்வொரு விஷயமாக நாம் சொல்லிக்கொண்டே போகலாம் – குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், தொழில் வளர்ச்சியில் 2020–21–ல் 46 ஆயிரத்து 189 தொழிற்சாலைகளாக இருந்தது. கடந்த ஆண்டு 2024–25–ல் 52 ஆயிரத்து 616 தொழிற்சாலைகளாக உயர்ந்திருக்கிறது. மிக குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள், ஐரோப்பிய நாடுகளில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக சுற்றுப் பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார். உலக அளவில் நாம் புரிந்து இருக்கக்கூடிய இந்த தொழில் முதலீட்டு ஒப்பந்தங்களின் வாயிலாக இதுவரை ஏறத்தாழ 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 10.28 இலட்சம் கோடி ரூபாய் முதலீடுகளை நாம் ஈர்த்திருக்கிறோம். இதன் வாயிலாக, ஏறத்தாழ 32.23 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்த தொழில் முதலீட்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது.

புதிய சிப்காட் தொழிற்சாலைகள், 16 நியூ டைடல் பார்க்குகள், 3 முழுமையான டைடல் பார்க்குகள் இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏற்றுமதியை பொறுத்தமட்டில் 2021–ஆம் ஆண்டில் 26.15 பில்லியன் டாலர் ஏற்றுமதி அளவாக இருந்தது. 2024–25–ஆம் ஆண்டில் அது இருமடங்காக உயர்ந்து 52.07 சதவீதமாக மில்லியன் டாலராக அது உயர்ந்திருக்கிறது என்பது மிக முக்கியமான ஒரு குறியீடாக இருந்திருக்கிறது.

### ஏற்றுமதி – உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு!

மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் நாம் நாட்டிலே முதலிடத்தில் இருக்கிறோம் – ஏற்றுமதி தயார்நிலை குறியீடு (Export preparedness Index) அதிலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது – தோல் ஜவுளிப் பொருட்களில் நாம் முதலிடத்தில் இருக்கிறோம் – காலணி மற்றும் தோல் பொருள் உற்பத்தியில் இந்தியாவின் மொத்த உற்பத்தியில் 38 சதவிகிதம் நம்முடைய பங்கு (stake) அதில் இருக்கிறது – பெண் காவல் அதிகாரியின் விகிதத்தில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. அதிக எண்ணிக்கையிலான ராம்சர் sites நாம் வைத்திருக்கிறோம். இப்படி ஒவ்வொரு துறையும் முன்னணி மாநிலமாக, வளர்ச்சிப் பெற்ற மாநிலமாக தமிழ்நாட்டில் நாம் இருந்திருக்கிறோம்.

கல்வித்துறையைப் பற்றி நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள். இல்லம் தேடி கல்வி, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் எல்லாம் மிகப் பெரிய அளவில் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் வந்ததற்குப் பிறகு தமிழ்நாட்டில் 37,416 அரசு மற்றும் அரசு உதவி பெறும் துவக்க பள்ளிகளில் படிக்கக்கூடிய 20.59 இலட்சம் மாணவர்கள் இதனால் பயன் பெற்று வந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் வாயிலாக மாணவர்களின் வருகை எண்ணிக்கை ஏறத்தாழ 9.21 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. மாணவர்கள் நேரத்திற்கு வருகை தரக்கூடிய சதவிகிதம் 98 சதவிகிதமாக இன்றைக்கு வந்திருக்கிறது.

இதுபோன்ற திட்டங்கள் அதாவது, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களின் வாயிலாக அதிக அளவில் இன்றைக்கு உயர்கல்வி பயிலக்கூடிய எண்ணிக்கை இன்றைக்கு உருவாகியிருக்கிறது – நான் முதல்வன் திட்டம் திறம் பெற்ற பல மாணவர்களை இன்றைக்கு உருவாகி வந்திருக்கிறது – மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் இன்றைக்கு ஏறத்தாழ ஒரு நாளைக்கு 65 இலட்சம் பேர் சராசரியாக பயன்பெறுகிறார்கள். ஏற்கனவே நாங்கள் பலமுறை சொல்லியிருப்பது போல, மாதத்திற்கு 838 ரூபாய் ஒவ்வொருவரும் சேமிப்பு செய்வதில் ஒரு வாய்ப்பு வந்திருக்கிறது – கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் 1 கோடியே 14 இலட்சம் பேருக்கு மாதம் 1000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

தோழி விடுதிகள், முத்திரை திட்டங்களாக இருக்கக்கூடிய திட்டங்கள் – கலைஞர் நூற்றாண்டு நூலகம், அலங்காநல்லூரில் ஜல்லிகட்டு அரங்கம் – கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கக்கூடிய கண்ணாடி இழைப் பாலம் – எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி – கீழடி அருங்காட்சியகம் – இப்போது பொருநையில் கட்டப்பட்டு கொண்டிருக்கக்கூடிய அருங்காட்சியம் என்று பல திட்டங்கள் – இப்படிப்பட்ட திட்டங்களுக்கு நடுவே நம்முடைய சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய வடசென்னை பகுதியில் தனி வளர்ச்சித் திட்டம் – ஏறத்தாழ 6158 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 235 பணிகள் இன்றைக்கு சிறப்பாக வந்து கொண்டிருக்கிறது.

ஊரக, நகர்ப்புற கட்டமைப்புகள் மிகச் சிறந்த அளவில் சாலைகள், பாலங்கள் இன்றைக்கு உருவாகிக் கொண்டு வந்திருக்கிறோம் – ஏறத்தாழ 86 புதிய குடிநீர் திட்டங்கள் கொண்டு வந்திருக்கிறோம். 1153 புதிய பாலங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது – 45000 கி.மீ. புதிய சாலைகள் உருவாக்கியிருக்கிறோம் – கலைஞர் கனவு இல்லத்தில் 2 இலட்சம் கான்கிரிட் வீடுகள் கட்டப்பட்டிருக்கிறது – போக்குவரத்தைப் பொறுத்தவரையில், 3 ஆயிரத்து 727 புதிய பேருந்துகள் வாங்கியிருக்கிறோம் – 2250 பேருந்துகள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது – கோயில் பராமரிப்புப் பணிகள் ஏறத்தாழ 7 ஆயிரத்து 439 ஏக்கர் நிலங்கள், 1832 கிரவுண்ட் காலி மனைகள் – 753 கிரவுண்ட் கட்டடங்கள் போன்றவை அறநிலையத் துறையின் சார்பாக மீட்கப்பட்டிருக்கிறது. இதன் மொத்த மதிப்பீடு 7 ஆயிரத்து 658 கோடி ரூபாய் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இதைத்தவிர, கும்பாபிஷேகம் என்று அழைக்கக்கூடிய திருக்கூடல் நன்னீராட்டு விழாக்கள் 2 ஆயிரத்து 820 திருக்கோயில்களில் நடத்தப்பட்டிருக்கிறது – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையை பொறுத்தமட்டில், 44–வது செஸ் ஒலிம்பியாட் – கேலோ இந்தியா – மிகப் பெரிய அளவில் நடைபெற்றிருக்கிறது.

இந்த 4 ஆண்டுகளில், 76 சிறு விளையாட்டு அரங்கங்கள் முதலமைச்சர் அவர்களின் பெயரால் அமைக்கப்பட்டிருக்கிறது – அதைப்போல, 4,200 பேருக்கு விளையாட்டு வீரர்களுக்கான உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது – 12,618 கிராமங்களுக்கு கலைஞர் விளையட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கிறது – விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்காக நிறைய திட்டங்கள் – ஆதி திராவிடர் பழங்குடியினருக்கான மாநில ஆணையம் – பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் – அயோத்தி தாசர் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம் – அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம்–கலைஞர்கைவினைத்திட்டம்–திருநங்கையினருக்கான வாழ்வாதாரத் திட்டங்கள் – சிறுபான்மையினர் நலத் திட்டங்கள் என்று பல திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கிறது – உழவர் நலன், மீனவர் நலன் மற்றும் பால்வளத்திற்கான பல்வேறு பணிகளையும் இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறோம்.

இவைகள் எல்லாம் சொன்ன திட்டங்கள் தவிர, சொல்லாத பல திட்டங்களையும் நாங்கள் நிறைவேற்றி வந்திருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

### ஆதி திராவிடர் – பழங்குடியின மாணவர்களுக்கு நிதி உதவிகள்!

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் திட்டங்களை பொறுத்தவரையில், 7 ஆணைகள் வெளியிடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, நடைமுறையில் இருக்கிறது. பரிசீலனையில் இருக்கக்கூடிய திட்டங்கள் என்று ஏதுமில்லை – தற்போது 7 திட்டங்கள் செயல்பாட்டிற்கு வந்திருக்கிறது – நடைமுறையில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசின் திட்டங்கள் இது குறித்து இருக்கக்கூடிய திட்டம் 1 – ஆக எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய 8 திட்டங்களில் 7 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு திட்டம் ஒன்றிய அரசிடம் நிலுவையில் இருக்கிறது.

அதேபோல மாணவர்களின் விடுதி கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், உணவுக் கட்டணத்தை உயர்த்தி வழங்கப்படும் என்றும் சொல்லியிருந்தோம். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு 45 கோடி ரூபாய் அளவில் நிதிகள் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த உணவு கட்டணம் 1000 ரூபாயிலிருந்து 1400 ஆகவும், பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கு 1100 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக நடைபெற்று வரக்கூடிய Special Component Plan என்ற ஒரு சிறப்பு திட்டத்தை முறையாக செயல்படுத்த வேண்டும் என்று பலரும் தொடர்ந்து நம்மிடத்தில் கோரிக்கை வைத்திருந்தார்கள் –அதற்கான தனியான மேம்பாட்டு செயல் திட்டம் தமிழ்நாடு அரசின் சட்டம் 2024–ன் அடிப்படையில் இயற்றப்பட்டிருக்கிறது.

### மீன்பிடி தடை காலத்தில் வழங்கப்படும் நிவாரணத் தொகை!

வேளாண் அறிவியல் அறிஞர் நம்மாழ்வார் பெயரில் இயற்கை வேளாண் மையம் தொடங்கப்படும் என்று கூறியிருந்தோம் – அந்த மையம் முதலமைச்சர் அவர்கள் 18.04.2022 அன்று துவங்கி வைக்கப்பட்டிருக்கிறது – கிருஷ்ணகிரி மாவட்டம், தேனூரில் தோட்டக்கலை பல்கலைக்கழகம் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருந்தோம் – அங்கே தோட்டக்கலை மற்றும் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 18.04.2022–ஆம் ஆண்டில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது – அதுபோல இப்போது பரிசீலனையில் இருக்கக்கூடிய சில தொலைநோக்குத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் வேலூர் மாவட்டத்தில், காவலூரில் மூடப்பட்டிருக்கக்கூடிய மூலிகைப் பண்ணையை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம் – இந்த 2024–25–ஆம் ஆண்டில் Focus Block Development Programme மூலமாக 40 லட்சம் மதிப்பீட்டில் மூலிகை பண்ணை இங்கே அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறையில் அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய தொலைநோக்கு திட்டங்கள் 34 – அதில் ஆணைகள் நிறைவேற்றப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருபவை 28 – அரசின் பரிசீலனையில் இருப்பது 3 – ஆக மொத்தம் 29 திட்டங்கள் – ஒன்றிய அரசிடம் 2 திட்டங்கள் நிலுவையில் இருக்கிறது – தற்போது நடவடிக்கைக்கு எடுக்கப்படாத திட்டங்கள் 3 – மீனவர்களுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள் – மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை ரூபாய் 5000–லிருந்து ரூபாய் 8000 ஆகவும் – மழைக்கால நிவாரணத்தொகை ரூபாய் 5000–லிருந்து ரூபாய் 6000 ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவித்திருந்தோம்.

அதற்கான ஆணைகள் வழங்கப்பட்டு, அந்த நிவாரணத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. விசைப்படகுகளுக்கு வழங்கப்படும் மானிய விலை டீசல் 1800 லிட்டரிலிருந்து 2000 லிட்டராகவும் – கட்டுமரம், நாட்டுப்படகு, பைபர் படகு ஆகியவற்றிற்கு வழங்கப்படும் எரிபொருள்களுக்கு 300 லிட்டரிலிருந்து 400 லிட்டராக வழங்கப்படும் என்பதை தெரிவித்திருந்தோம். அது ஆண்டொன்றுக்கு மானிய விலை டீசல் அளவு விசைப் படகிற்கு 19 ஆயிரம் லிட்டராகவும், இயந்திரம் பொருத்தப்பட்டிருக்கக்கூடிய நாட்டுப் படகுகளுக்கு 4400 லிட். ஆக உயர்த்தி வழங்கப்பட்டிருக்கிறது.

### கதர் – கைத்தறித் திட்டங்கள்!

இலவச மின்சாரம் வழங்குவது குறித்து கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கக்கூடிய இலவச மின்சாரம் இரண்டு மாதத்திற்கு 200 என்பதை 300 யூனிட்டாக மாற்றி வழங்கப்படும் என்று சொல்லி இருந்தோம். அதற்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை 200 யூனிட் வழங்கப்படும் மின்சாரம் 3.3.2023 முதல் 300 யூனிட்டாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் 2024–25–ஆம் ஆண்டில் 14.72 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஏறத்தாழ 75 ஆயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

விசைத்தறி இரண்டு மாதத்திற்கு 750 யூனிட்டாக இருக்கக்கூடிய இலவச மின்சாரம் 1000 யூனிட்டாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்று அறிவித்திருந்தோம் – இரண்டு மாதத்திற்கு 750 யூனிட் என்பதை 1000 யூனிட்டாக உயர்த்தி வழங்க அரசாணை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்தோம். இதன் வாயிலாக ஏறத்தாழ ஒரு லட்சத்து 62 ஆயிரம் விசைத்தறி நெசவாளர்கள் பயன்படக்கூடிய வகையில் 563 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு அதற்காக வழங்கப்பட்டிருக்கிறது.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை 14 திட்டங்கள் தொலைநோக்கு திட்டங்கள் – ஆணைகள் வெளியிடப்பட்டு நிறைவேற்றப்பட்டவை 11 திட்டங்கள் – அரசின் பரிசீலனையில் ஒரு திட்டம் இருக்கின்றது – 12 திட்டங்கள் இப்போது நடைமுறையில் இருக்கிறது –நடவடிக்கைக்கு இப்போது எடுத்துக் கொள்ளப்படாத திட்டங்கள் இரண்டு திட்டங்கள் – இதில் சில குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் முக்கியமாக, விக்கிரவாண்டி, கும்பகோணம், தஞ்சாவூர் நான்கு வழி சாலை திட்டம் – இந்த வகையில் பணி முன்னேற்றம் ஒவ்வொரு தொகுப்பிலும் இப்போது காணப்பட்டு, சில இடங்களில் பணி முன்னேற்றத்தில் இருக்கிறது – பல இடங்களில் பணிகள் முடிவு பெற்றிருக்கிறது – அதே போல தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய முக்கிய இரு வழிச் சாலைகள் – 4 வழிச்சாலையாகவும் – 4 வழிச்சாலைகள் 6 வழிச் சாலைகளாகவும் மாற்றப்படும் என்று சொல்லியிருந்தோம்.

அது கடந்த நான்கு ஆண்டுகளில், 832 கி.மீ. சாலைகள் 6047 கோடி மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 586 கிலோமீட்டர் நான்கு வழிச்சாலைகள் பணிகள் 5,079 கோடி ரூபாயில் முடிவடைந்திருக்கிறது. மீதப் பணிகள் வெவ்வேறு நிலைகளில் இருக்கிறது –2024–25–ஆம் ஆண்டில், 742 கி.மீ. பணிகள் 1568 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு ஒப்பந்தங்கள் கோரப்பட்டிருக்கிறது.

பல இடங்களில், தரைமட்ட பாலங்கள், உயர்மட்ட பாடங்களாக மாற்றப்படும் என்று நாங்கள் சொல்லி இருந்தோம் – அந்த பாலங்களும் 2021–22–ஆம் ஆண்டு மானிய கோரிக்கையில் 1281 தரைப்பாலங்களில், நான்கு ஆண்டுகளில், 1197 தரைப்பாலங்கள் 2400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு, 1140 பாலங்கள் 1052 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 84 பாலங்களில் இந்த ஆண்டு நபார்டு மற்றும் கிராம சாலைகள் உடைய அந்த யூனிட் மூலமாக எடுத்திருக்கக்கூடிய 72 பணிகள் – அதுபோல கட்டுமானம் மற்றும் பராமரிப்பு பணிகள் மூலமாக 12 பணிகளும் எடுக்கப்பட இருப்பதை நாங்கள் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், 15 அறிவிப்புகள் – 10 அறிவிப்புகள் இப்பொழுது நிறைவேற்றப்பட்டு, நடைபெற்றுக்கொண்டிருக்கிறது – அரசின் பரிசீலனையில் இரண்டு உள்ளது – மொத்தம் 12 அறிவிப்புகள் – ஒன்றிய அரசிடம் 2 அறிவிப்புகள் உள்ளது – தற்போது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படாதது 1 இருக்கிறது – இதில் மிக முக்கியமாக நாங்கள் சொல்லியிருந்தது – கொரோனா தொற்றின் காரணமாக மூடப்பட்ட தொழிற்சாலை மீண்டும் இயங்குவதற்கு எளிய தவணைகளில் திரும்ப செலுத்த கூடிய வகையில் கடன் உதவி செய்வதற்கு 15,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்று நாங்கள் சொல்லியிருந்தோம் – அதற்கான உத்தரவாதங்கள் 9.14 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது – DIC மூலமாக கடன் உதவிகள் 230 கோடி ரூபாய்க்கு வழங்கப்பட்டிருக்கிறது.

### தொழில் துறையின் வளர்ச்சி!

MSME சிறு, குறு தொழில் துறையின் சார்பில், பணப்புழக்கம் இருக்கக்கூடிய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 581 நிறுவனங்களுக்கு 150 கோடி ரூபாய் அளவில் உதவிகள் வழங்கப்பட்டு இருக்கிறது – மதுரை, தூத்துக்குடி காரிடரில் புதிய தொழில்கள் நடைபெறும் – சென்னை, திருப்பெரும்புதூரில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் தொழில் பாதையில் உருவாக்கப்படும் என்பதை சொல்லியிருந்தோம் – இப்பொழுது மதுரை, தூத்துக்குடி தொழில் வளத்திற்கு 8 சிப்காட் தொழிற் பூங்காக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது – நில எடுப்பு பணிகள் மற்ற இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது – சென்னை, பெங்களூர் தொழில் வளத்தை 17 சிப்காட் தொழிற் பூங்காக்கள் இருக்கிறது – 7 இடங்களில் நில எடுப்பு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது – இந்திய .......... கோவையில் துவங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருந்தோம். அதற்கான டிட்கோ நிறுவனத்தின் மூலமாக அமைப்பதற்கு இந்த முறை சட்டமன்றத்திலே நாங்கள் அறிவிப்பினை வெளியிட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதுபோல Single Windows System ஒற்றைச் சாலர முறையில் நாம் முறையாக பயன்படுத்தி தொழில்வளம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருந்தோம் – Single Windows System 2.0 அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டிருக்கிறது – 32 துறைகளைச் சார்ந்த 196 சேவைகள் இதில் அளிக்கப்பட்டிருக்கிறது.

### புதிய விமான நிலையங்கள்!

நியூ ஏர்போர்ட் – ஓசூர், ராமநாதபுரம், வேலூர், கரூர் போன்ற இடங்களில் புதிய விமான நிலையம் கொண்டு வருவோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்தப் பணிகள் தற்போது இடம் கண்டறியக் கூடிய பணிகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவிக்க விரும்புகிறேன் – எவ்வளவு முதலீடு என்பதை நான் துவக்கத்திலேயே நான் தெரிவித்து இருக்கிறேன் – அதேபோல அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களில் 10 அறிவிப்புகள் இப்பொழுது அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது – இரண்டு திட்டங்கள் பரிசீலனையில் உள்ளது – 12 திட்டங்கள் மொத்தமாக நடைமுறையில் இருக்கிறது – நடவடிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படாதவை 1 திட்டமாக இருக்கிறது.

### குடிசைத் தொழில்கள் மேம்பாடு!

நலிந்து வரக்கூடிய உப்பு உற்பத்தி, வெள்ளி கொலுசு தயாரிப்பு, பித்தளை தொழில், வெள்ளி விளக்குகள் செய்கின்ற தொழில் செய்பவர்களுக்கு குடிசைத் தொழிலாக மேம்பட அறிவிக்கப்படும் என்று நாங்கள் தெரிவித்திருந்தோம் – ஆகவே, இவையெல்லாம் சிறப்பு தொழில் திட்டத்தின் வகையில் முதலீட்டு மானியங்கள் சிறப்பாக சொல்லி இருக்கிறோம் – உப்பு உற்பத்தியை தவிர மற்றவை எல்லாம் கலைஞர் கைவினை திட்டத்தில், தற்போது சேர்க்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ஆணைகள் வெளியிடப்பட்டு, 23 திட்டங்களில் 20 திட்டங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது – ஒன்று பரிசீலனையில் இருக்கிறது – இரண்டு திட்டங்கள் நடைமுறைக்கு இன்னும் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது.

சென்னையில் ஓடக்கூடிய அடையாறு, கூவம் ஆறு பக்கிங்காம் கால்வாய் ஆகியவை கடலில் கழிவு நீர் கலப்பதை தடுத்து சுத்திகரிக்கப்பட்ட பிறகு அதை விடுவதன் மூலமாக அதனுடைய நீரோட்டம் அதில் இருக்கிற நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இருந்தோம் – இப்போது ஏறத்தாழ 383 கோடி ரூபாய் செலவில் அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### பேருந்து நிலையங்கள் நவீனமயமாக்கல்!

அதுபோல மற்ற இடங்களில் பேருந்து நிலையங்கள், தங்குமிடங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்று சொல்லியிருந்தோம் – சிதம்பரம், நாகப்பட்டினம், திருத்தணி, திருவரங்கம், திருவண்ணாமலை, வடலூர், பழனியில் 119 கோடி ரூபாய் செலவில் பேருந்து நிலையப் பணிகள் நடைபெற்று வருகிறது. குற்றாலம் மற்றும் வேளாங்கண்ணியில் பக்தர்கள் தங்கும் வசதிகள் பேரூராட்சியின் சார்பில் பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்னை போன்ற பெருநகரங்களில் அடுக்குமாடி கார் நிறுத்தும் வசதிகள் செய்யப்படும் என்று சொல்லி இருந்தோம் – தி.நகரில் இப்பொழுது வாகன நிறுத்தம் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருக்கிறது – மேலும் 10 இடங்களில் இப்பொழுது அடையாளம் காணப்பட்டு வருகிறது.

பள்ளிக்கல்வித்துறை பொறுத்தமட்டில், 22 திட்டங்கள் அதில் 17 திட்டங்களுக்கு ஆணைகள் வெளியிடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கிறது – பரிசீலனையில் இரண்டு திட்டங்கள் இருக்கிறது – மொத்தம் 19 திட்டங்கள் – ஒன்றிய அரசிடம் ஒரே ஒரு திட்டம் இருக்கிறது – நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படாத திட்டம் 2 இருக்கிறது – இதில் மாநில கொள்கை உருவாக்குவதற்காக ஒரு உயர் நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தோம் – மாநிலக் கொள்கையில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் 8–ஆம் தேதி வெளியிட்டிருக்கிறார்கள்.

அதேபோல் தமிழ் மொழியில், மொழி வழி சிறுபான்மையினர் தங்களுடைய தாய்மொழியில் பயிலுவதற்கு உரிய வசதிகள் செய்யப்படும் என்று சொல்லியிருந்தோம் – தமிழ் கற்க சட்டம் 2006–ன்படி பத்தாம் வகுப்பு தேர்வுப் பகுதியில் 4–ல் அவர்களுடைய அந்த மொழி வழி சிறுபான்மையினரும் தங்கள் மொழியில் எழுதுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கிறது – ஆசிரியர்களின் நியமனங்கள், மாறுதல்கள் ஒளிவு மறைவற்ற கலந்தாய்வின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறது.

### அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும்!

446 ஊர்ப்புற நூலகங்களுக்கு இன்றைக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டு இருக்கிறது – அண்ணா நூற்றாண்டு நூலகம் ஏறத்தாழ 32.48 கோடி ரூபாய் செலவில் புதுப்பொலிவு பெறக்கூடிய வகையில் புனர் அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் சார்பில் 19 திட்டங்கள் – 15 திட்டங்கள் இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிறது – அரசின் பரிசீலனையில் எதுவுமில்லை – ஒன்றிய அரசிடம் இரண்டு திட்டங்கள் நிலுவையில் இருக்கிறது – இப்போது நிறைவேற்றப்படாமல் இப்போதைக்கு எடுத்துக்கொள்ளப்படாத இரண்டு திட்டங்கள் இருக்கிறது – இதில் குறிப்பாக உலகெங்கிலும் இருக்கக்கூடிய பல்கலைக் கழகங்களில் தமிழ் இருக்கைகள் அமைப்பது – ஹூஸ்டன், அமெரிக்கா, ஜெர்மனியில் கலோங் பல்கலைக் கழகத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேற்று கலோங் பல்கலைக் கழகத்திற்கு சென்று அங்கே இருக்கக்கூடிய தமிழ் பேராசிரியர் இடத்தில் உரையாடி இருக்கிறார். அங்கே இருக்கக்கூடிய நூலகங்களை பார்வையிட்டு வந்திருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தி – அதற்கு நம்முடைய தமிழ்நாடு அரசின் சார்பில் ஏறத்தாழ 1.25 கோடி நிதி உதவியாக வழங்கப்பட்டிருக்கிறது – டெல்லியில் இருக்கக்கூடிய ஜெ.நியூ–க்கு ஏறத்தாழ 5 கோடியே 40 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகையாளர்களின் ஓய்வூதிய திட்டத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்யப்பட்டு மீண்டும் சிறப்பானதாக மாற்றியமைக்கப்பட்டு அவர்களுக்கு தற்போது வழங்கப்படக்கூடிய ஓய்வூதியம் உயர்த்தி வழங்கப்படும் என்று சொல்லியிருந்தோம் – அது 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட அரசாணை எண்.86–ல் வழங்கப்பட்டிருக்கிறது.

மரணம் அடைந்த பத்திரிகையாளரின் குடும்ப நிவாரண நிதியாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று சொல்லியிருந்தோம். அது இப்போது பத்து இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

### 8–ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம்!

அதுபோல, சிபிஎஸ்சி போன்ற அனைத்து தகுதிவாய்ந்த ஆசிரியர்களை நியமிக்க 8–ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படவேண்டும் என்று சொல்லியிருந்தோம். இது அனைத்திற்கும் கட்டாய படமாக கற்பிக்க தேர்வு அரசாணை எண்.285 டிசம்பர் 31, 2024–ஆம் ஆண்டு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

சுற்றுலா பண்பாடு திட்டங்களில், ஏறத்தாழ 24 திட்டங்களில் 23 திட்டங்கள் செயலாக்கத்தில் இருக்கிறது – தற்போது எடுத்துக்கொள்ளப்படாத திட்டம் 1 திட்டமா இருக்கிறது.

ஓய்வூதியம் 4000 ரூபாயாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது – பொங்கல் கருணைத் தொகை 1,000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது – அதுபோல அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பெரிய கோயிலில் மூத்த குடிமக்களுக்கு ஒரு மணி நேரம் தனி வரிசையில் தரிசனம் செய்வதற்கான வாய்ப்புகளும் தற்போது உருவாக்கப்பட்டிருக்கிறது.

### கலைஞர் நூற்றாண்டு நூலகம்; அருங்காட்சியகங்கள் உருவாக்கம்!

அருங்காட்சியகம் ஒன்றை நாம் சிவகங்கையில் உருவாக்கப்படும் என்று சொன்னோம் – கீழடியில் அருங்காட்சியகம் உருவாக்கப்பட்டு இன்றைக்கு உலகெங்கும் இருக்கக்கூடியவர்கள் அங்கு வந்து அந்த அருங்காட்சியகத்தின் மாட்சியை கண்டு செல்லக்கூடிய வகையில் மிகச்சிறப்பாக அறிவித்திருக்கிறார்கள் – அதற்குமேல் அங்கே இருக்கக்கூடிய அகழ்வாய்வு நடைபெற்றப் பகுதிகளிலும் அகழ்வாய்வு தளத்திலேயே ஒரு மியூசியம் அமைப்பதற்கு இப்போது முதலமைச்சர் அவர்கள் உத்தரவு வழங்கி அந்த இடங்கள் கையகப்படுத்தப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் நடவடிக்கைக்கு எடுத்துக் கொள்ளப்படாதவை ஏற்கனவே சொல்லியிருந்தோம் – பழனி மற்றும் கொடைக்கானலுக்கு இடையில் ரோப் கார் கொடுக்கலாம் என்று சொல்லியிருந்தோம். அதற்கு நடுவில், reserve forest இருப்பதால் clearance கிடைக்கவில்லை – ஆதலால், சாத்தியக்கூறுகள் இல்லாத வகையில் அந்தத் திட்டம் இருக்கிறது என்பதை நாங்கள் தெரிவித்தோம்.

முத்திரைத் திட்டங்களான கலைஞர் நூற்றாண்டு நூலகம், கலைஞர் நூற்றாண்டு ஜல்லிக்கட்டு அரங்கம், அய்யன் திருவள்ளுவர் சிலை – விவேகானந்தர் பாறை இணைப்பு கண்ணாடி இழைப் பாலம் – எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதி என்பது மிகச் சிறப்பான வகையில் உலக தரத்தில் கல்லூரி விடுதியாக உருவாகியிருக்கிறது – கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை 250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கலைஞர் இன்டர்நேஷனல் கன்வென்ஷன் சென்டர் ஒன்று இப்போது 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வந்து கொண்டிருக்கிறது – வள்ளுவர் கோட்டம் புனரமைப்பு 80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டிருக்கிறது – தொடக்கத்தில் சொன்னதுபோல கீழடி அருங்காட்சியகம் ஏறத்தாழ 19 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டிருக்கிறது – கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஆறு இலட்சம் பேர் வந்திருக்கிறார்கள் – ராம்சர் சைட்ஸ் இந்தியாவிலேயே தமிழ்நாடு 20 இடங்களைப் பெற்று இருக்கிறது – நமக்கு பிறகு உத்திரபிரதேசம் இருக்கிறது. இந்தியாவிலேயே மிக முக்கியமான ஒரு ஸ்தலமாக தமிழ்நாடு இருந்து கொண்டிருக்கிறது.

நான் இதுவரை சொன்னதெல்லாம் எங்களுடைய தேர்தல் அறிக்கையில் சொல்லி, அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டு, இவைகள் தொலைநோக்குத் திட்டங்களாக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்து over view–ஆக நான் சொல்லியிருக்கிறேன் – இந்த திட்டங்கள் தவிர, சொல்லாத பல திட்டங்களை நம்முடைய அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

கலைஞருடைய அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் – ஏறத்தாழ 10,187 கிராம ஊராட்சிகள் இந்தத் திட்டம் 756.86 கோடி ரூபாயில் செயல்படுத்தப்பட்டு வருகிறது – அதன் மூலமாக பயிர் உற்பத்தி திறன் கேழ்வரகு பொறுத்தவரையில், அகில இந்திய அளவில் சிறுதானியங்களில் மூன்றாம் இடத்தில் நாம் இருக்கிறோம்.

அதுபோல, இல்லம் தேடி கல்வியில் 34 லட்சம் மாணவர்கள் பயன் பெறத்தக்க வகையில் 44800 மையங்கள் – காலை உணவு திட்டம் 37416 மற்றும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் கூடங்களில் 21 லட்சம் மாணவர்கள் பயன் பெறக்கூடிய திட்டம் – 600 கோடி ரூபாய் செலவில் –

### வட சென்னை வளர்ச்சித் திட்டம்!

எண்ணும் எழுத்தும் திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் – உயர்கல்விக்கு நம்முடைய மாணவர்களை அழைத்துச் செல்லக்கூடிய திட்டம் – அதில் 5 இலட்சத்து 12433 மாணவிகள் பயன்பெறுகிறார்கள் – ஏறத்தாழ 900 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது – தமிழ்ப் புதல்வன் திட்டம் – 390 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 3 லட்சத்து 86 ஆயிரம் மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில், உயர்கல்வி பெறக்கூடிய வாய்ப்பு – மக்களை தேடி மருத்துவம் –– இன்னுயிர் காப்போம் – 318 கோடி ரூபாய் – மக்களைத் தேடி மருத்துவத்தில் 658 கோடி ரூபாய்க்கு ஏறத்தாழ 2.25 கோடி மக்கள் அதில் பயனடைகிறார்கள் – முதல்வர் மருந்தகம் – பாதம் காப்போம் திட்டம் – கலைஞரின் கனவு இல்லம் திட்டம் – 2 இலட்சம் வீடுகள் 7000 கோடி செலவில் வீடு கட்டக்கூடிய திட்டம் மிகப் பெரிய அளவில் வந்திருக்கிறது – வடசென்னை வளர்ச்சித் திட்டம் – ஆறாயிரத்து 858 கோடி ரூபாய் செலவில் 235 பணிகள் எடுக்கப்பட்டிருக்கிறது.

அயோத்திதாசர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தில், ஏறத்தாழ மூவாயிரத்து 658 பணிகள் 400 கோடி ரூபாய் செலவில் வந்திருக்கிறது – 26 மாவட்டங்களில் தொங்குடி மேம்பாட்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டு, அதில் 750 வீடுகள் அணுகுசாலைகள் 250 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் கொண்டு வந்திருக்கிறோம் – அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம் மூவாயிரத்து 166 பயனாளிகள் பயன் பெறுகிறார்கள் – கலைஞர் கைவினை திட்டம் – கோயில் நிலங்கள் மீட்பு – கிராமப்புற கோயில் பராமரிப்பு பணிகள் – அறிவுசார் மையங்கள் – தோழி விடுதி – இப்போது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய “உங்களுடன் ஸ்டாலின்” – தமிழகம் முழுவதும் பத்தாயிரம் முகாம்கள் – ஏறத்தாழ 55 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் வந்திருக்கிறது – பெறப்பட்டிருக்கக்கூடிய அந்த மனுக்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எவ்வளவு என்பதை தெரிவித்திருக்கிறோம் – 9 இலட்சத்து 5 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்கிறது – இரண்டாம் கட்டத்தில் 14.6 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு 12.8 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது – மூன்றாம் கட்டத்தில் 1.09 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு 1.01 இலட்சம் மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

ஆகவே, நான் சொல்லியிருக்கக்கூடிய திட்டங்களின் நிலைகள் ஒட்டுமொத்தமாக அறிவித்திருக்கக்கூடிய திட்டங்கள் – இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டு, நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய திட்டங்கள் – நிறைவேற்றப்பட்டு நடைமுறையில் இப்பொழுது பரிசீலனையில் இருக்கக்கூடிய திட்டங்கள் – தொடர்ச்சியாக நடைமுறையில் இருக்கக்கூடிய திட்டங்கள் – ஒன்றிய அரசிடம் நிலுவையில் உள்ள திட்டங்கள் – சில திட்டங்கள் ஒரு 60 திட்டங்கள் – நாங்கள் இப்போதைக்கு எடுத்துக் கொள்ளவில்லை போன்ற திட்டங்கள் – இதற்கு மேல் இருக்கக் கூடிய முத்திரை திட்டங்கள் – அதற்கு ஒரு படி தாண்டி இருக்கக்கூடிய இந்த திட்டங்களில் சொல்லாமல் இருந்து முதலமைச்சர் அவர்கள் உணர்ந்து தமிழ்நாட்டு மக்களின் தேவைகளை அறிந்து, முதலமைச்சர் அவர்களின் தனி கவனத்தில் அவர்கள் அறிவித்து, சொல்லாமலேயே நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் என்று இந்த நான்காண்டுகள் முடிந்து ஐந்தாம் ஆண்டில் சென்று கொண்டிருக்கும் போது முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்த தமிழ்நாடு அரசு, திராவிட மாடல் அரசு எத்தகைய பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்டி சொல்லியிருக்கிறோம்.

இவ்வாறு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எஸ்.எஸ். சிவசங்கர், முனைவர் கோவி. செழியன் ஆகியோர் தெரிவித்தனர்.